சுருக்கம்

பள்ளிக் கல்வி – அரசுத் தேர்வுகள் இயக்ககம் – மேல்நிலை / இடைநிலைக் கல்விப் பொதுத் தேர்வுகள் மார்ச் /ஏப்ரல் 2014 – விடைத்தாள் முகப்புச்சீட்டு படிவங்கள் அரசு தகவல் தொகுப்பு விவர மையத்திலிருந்து அச்சிட்டு வழங்கிட அனுமதி அளித்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

பள்ளிக்கல்வி (ஜிஇ1) துறை

அரசாணை (நிலை) எண் 04. நாள்: 10.01.2014.
மார்கழி 26.
திருவள்ளுவராண்டு 2044.

படிக்கப்பட்டவை:-

1. அரசாணை (நிலை) எண். 150, பள்ளிக் கல்வி நாள் 07.08.2013.
2. அரசுத் தேர்வுகள் கடித ந.க.எண். 00001/எச்1/2013, நாள் 02.01.2014.

---------

**ஆணை :-**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் மேல்நிலைத் தேர்வு விடைத்தாளில் கடைபிடிக்கப்பட்டு வரும் மாற்றெண் வழங்கிடும் முறைக்கு (Dummy Numbering System) பதிலாக, மாற்று முறையை கடைபிடித்திட தேசிய தகவலியல் மைய தொழில் நுட்ப இயக்குநர் மற்றும் அரசு தகவல் தொகுப்பு விவர மைய துணை இயக்குநருடன் கலந்தாலோசிக்கப்பட்டவாறு மாற்றெண்ணிடும் முறையில் எடுகுறிச்சீட்டிற்கு பதிலாக, தேர்வர்களுக்கு வழங்கப்படும் முதன்மை விடைத்தாளுடன் தேர்வரின் புகைப்படம், தேர்வரின் விவரங்கள் மற்றும் Barcode இடம் பெறும் படிவம் அரசு மைய அச்சகத்தில் 90 gsm காகிதத் தரத்தில் படிவங்களை with perforation அச்சிட்டு அரசுத் தேர்வுகள் இயக்குநருக்கு வழங்க எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை ஆணையருக்கு அனுமதி வழங்கி ஆணை வெளியிடப்பட்டது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்டுள்ள அரசுத் தேர்வுகள் இயக்குநர் கடிதத்தில், நடைபெறவுள்ள மார்ச் / ஏப்ரல் 2014 மேல்நிலை/ இடைநிலைக் கல்வி விடுப்புச் சான்றிதழ் பொதுத் தேர்விற்கு வழங்கப்படும் விடைத்தாளின் மாற்றெண்ணிடும் முறையில் எடுக்குறிச்சீட்டிற்குப் பதிலாக, தேர்வர்களுக்கு வழங்கப்படும் முதன்மை விடைத்தாளுடன் Barcode இடம் பெறும் புதிய படிவத்தை அரசு மைய அச்சகத்தில் 90gsm காகிதத் தரத்தில் Perforation உடன் அச்சிட்டு அரசுத் தேர்வுகள் இயக்ககத்திற்கு வழங்க எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை ஆணையருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது எனவும், Barcode மற்றும் variable data ஆகியவற்றை அச்சிடும் நவீன அச்சு இயந்திரம் (Digital Printer) அரசு அச்சகத்தில் இல்லை என்பதால் variable data-ஐ அரசு புள்ளி விவர வகைப்பாட்டு மையத்தில் அச்சடிக்க ஏதுவாக Topsheet -ன் படிவத்தின் 1000 பிரதிகளை மட்டும் ( Blank Top sheet form without variable data ) அச்சிட்டு வழங்குமாறும், அரசு மைய அச்சகத்திலிருந்து பெறப்பட்ட Blank Top Sheet-ஐ கொண்டு variable data- ஐ பரிசார்த்த முறையில் GDCல் 1000 பிரதிகள் அச்சடித்து பெறப்பட்டது என்றும், படிவம்

மற்றும் variable data ஆகியன தனித் தனியாக அச்சடிக்கப்பட்டதால் Top sheet alignment திருப்திகரமாக இல்லையென்பதால் அரசு மைய அச்சகத்தில் இப்பணியினை முழுமையாக மேற்கொள்ள இயலாது என தெரிய வருவதாலும், மந்தணத் தன்மையினை காக்கும் பொருட்டு இப்பணியினை தனியார் நிறுவனத்திடம் வழங்க இயலாது என்பதாலும், Top sheet முழுமையாக GDC– ல் அச்சடித்தால் மட்டுமே அப்பணி நிறைவானதாக இருக்கும் என்பதால் மேல்நிலை மற்றும் இடைநிலை தேர்விற்கான முகப்புச்சீட்டு படிவங்கள் (Top sheet ) அனைத்தையும் அரசு தகவல் தொகுப்பு விவர மையத்திலேயே அச்சடித்து வழங்க அரசு புள்ளி விவர தொகுப்பு மைய ஆணையருக்கு உரிய ஆணை வழங்குமாறு அரசுத் தேர்வுகள் இயக்குநர் அரசை வேண்டியுள்ளார்.

**3.** அரசுத் தேர்வுகள் இயக்குநரின் கருத்துருவினை அரசு நன்கு பரிசீலித்து, அதனை ஏற்று மேல்நிலை/ இடைநிலைக் கல்வி விடுப்புச் சான்றிதழ் பொதுத் தேர்விற்கு வழங்கப்படும் விடைத்தாளின் மாற்றெண்ணிடும் முறையில் எடுக்குறிச்சீட்டிற்குப் பதிலாக, தேர்வர்களுக்கு வழங்கப்படும் முதன்மை விடைத்தாளுடன் தேர்வரின் புகைப்படம், தேர்வரின் விவரங்கள் மற்றும் Barcode இடம் பெறும் புதிய படிவத்தை (முகப்புச் சீட்டு படிவங்கள்–Top Sheet) அரசு மைய அச்சகத்தில் 90gsm காகிதத் தரத்தில் படிவங்களை with perforation அச்சிட்டு அரசுத் தேர்வுகள் இயக்ககத்திற்கு அரசாணை (நிலை) எண்.150, பள்ளிக் கல்வி நாள் 07.08.2013–ல் வழங்க எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறைக்கு வழங்கி வெளியிடப்பட்ட ஆணையினை ரத்து செய்தும், மேலும், மேல்நிலை மற்றும் இடைநிலை தேர்விற்கான முகப்புச்சீட்டு படிவங்கள் (Top sheet) அனைத்தையும் அரசு தகவல் தொகுப்பு விவர மையத்திலேயே அச்சடித்து வழங்க அரசு புள்ளி விவர தொகுப்பு மைய ஆணையருக்கு அனுமதி வழங்கியும் அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

த. சபிதா,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
அரசுத் தேர்வுகள் இயக்குநர்,சென்னை–6.
ஆணையர், எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை,
சென்னை–8
தேசிய தகவலியல் மைய தொழில்நுட்ப இயக்குநர்,
சென்னை–9
அரசு தகவல் தொகுப்பு விவர மையம், சென்னை–25

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.